பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை 07.11.2025 கதிர் 362

# வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கடும் நிலைப்பாட்டை எடுப்போம்

## சாணக்கியன் எம்.பி. கொந்தளிப்பு



தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றி அரசுத் தலைவரிடம் கலந்துரையாடுவதற்கு அனுமதி கோரி ஐந்து மாதங்கள் காத்திருக்கிறோம். இதுவரையில் பதிலேதும் கிடைக்கவில்லை. வரவு - செலவுத் திட்டத்தின்போது கடுமையான தீர்மானம் எடுப்போம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கொழும்பில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். இந்த வரவு - செலவுத் திட்டம் ஊடாக பெரும் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ஆளும்தரப்பு அரச சேவையாளர்களின் சம்பளத்தை ☞2

## இனி அது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைகளில் காணப்படும் கலப்புத் தேர்தல் முறை காரணமாக எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையோடு ஆட்சியமைக்க முடியாத நிலையில், அவற்றின் முதலாவது வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் இனிவரும் நாள்களில் வரவுள்ளன. பெரும்பாலான சபைகளில் ஆளும் கட்சியின் உறுப்பினர்களைவிட எதிர்க் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையே அதிகம் உள்ள நிலையில் இந்த வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

அந்த வகையில் முதலாவது தோல்வியை ஆளும்தரப்பான தேசிய மக்கள் சக்தியே சந்தித்துள்ளது. ☞2

## 10 மாதங்களில் 2,343 பேர் விபத்துக்களில் உயிரிழப்பு

இந்த ஆண்டு ஜனவரி முதல் இன்றுவரை 2,210 விபத்துக்களில் 2,343 பேர் உயிரிழந்துள்ளனர் என்று காவல்துறை ஊடகப் பேச்சாளர், உதவி காவல்துறைகண்காணிப்பாளர்(புறீஊண) வூட்லர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இதுவரை 4,380 கடுமையான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பொலிஸ் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது ☞2

### கணவன், மகன் கைதை அடுத்து

## பேலியகொட நகர சபையின் என்பிபி உறுப்பினர் பதவி துறப்பு

தனது கணவர் மற்றும் மகன் ஆகியோர் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பேலியகொட நகர சபையின் தேசிய மக்கள் சக்தி (NPP) உறுப்பினர் டிஸ்னா நிரஞ்சலா குமாரி பதவி துறந்துள்ளார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கம்பஹா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் சமர்ப்பித்துள்ளார், அதன் பிரதி தேசிய மக்கள் ☞6

## 2028இல் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாதிருக்க ஏற்றுமதி வளர்ச்சி தேவை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி 2028 ஆம் ஆண்டு மீண்டும் ஏற்படாமல் இருக்க, இலங்கை விரைவான பொருளாதார வளர்ச்சியையும் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சியையும் பராமரிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்தியாவிற்கான தனது பயணத்தில், இந்திய செய்தி சேவைக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஆளும்தரப்பு தேவையான இலக்குகளை அடையவில்லை என்று கூறினார்.

‘அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நாங்கள் எப்போதும் செயல்படுத்துவோம் என்பதே எங்கள் நிலைப்பாடு. இது நமது நாட்டின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கியது. எங்கள் நிலைப்பாடு குறித்து ஊகிக்க வேண்டிய ☞6

## தமிழ்க் கட்சிகள் மீண்டும் ஒன்றுசேர நிபந்தனை விதிப்பது பொருத்தமற்றது

### தமிழ் அரசுக் கட்சியின் அழைப்புக்கு சுரேஸ் பதிலடி

தமிழ்க் கட்சிகள் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உருவாவதற்கு நிபந்தனைகளை வைப்பது பொருத்தமில்லை. அது பற்றிப் பேசி முடிவெடுக்கலாம் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் வவுனியாவில் புதன்கிழமை நடைபெற்றபோது ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது குறித்துப் பேசுவது என முடிவு செய்யப்பட்டிருப்பதாகச் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

ஜனநாயகத் தமிழ்த் ☞6

## பாடசாலை நேரம் அடுத்தாண்டு 30 நிமிடங்கள் அதிகரித்தே தீரும்

அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள புதிய கல்வி சீர்திருத்த செயல்முறையின் கீழ் பாடசாலை நேரம் 30 நிமிடங்கள் அதிகரிக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவேவ தெரிவித்தார்.

ஆளும்தரப்பின் இந்தத் திட்டத்திற்கு ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. பாடசாலை நேரத்தை அதிகரிப்பதாயின் ஆசிரியர்களுக்கு சம்பள ☞2

## இழப்பீட்டு அலுவலக நியமனம் குறித்து அநுரவிற்குத் தமிழ் அரசுக் கட்சி கடிதம்

இழப்பீட்டு அலுவலகத்திற்கான நான்கு பதவி நிலைகளுக்குப் பாதுகாப்புப் பின்புலம் கொண்டவர்களை நியமனம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்கு கடிதம் எழுதியுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மேலே குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் (Office of Rep- ☞2

## 2026 வரவு செலவுத் திட்டம் இன்று அரசுத் தலைவர் அளிக்கை செய்கிறார்

தேசிய மக்கள் சக்தி (ஹிஊணஊண) ஆளும்தரப்பின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் அறிக்கை செய்யப்படவுள்ளது. இது சுதந்திர இலங்கையின் 80ஆவது வரவு செலவுத் திட்டமாகும்.

நிதியமைச்சர் என்ற வகையில் அரசுத் தலைவர் அநுரகுமார, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பை, அதாவது வரவு செலவுத் திட்ட உரையை பிற்பகல் 1.30 மணிக்குத் தொடங்குவார். ஒதுக்கீட்டு மசோதாவின் முதல் வாசிப்பு இந்த ஆண்டு செப்டம்பர் 26 அன்று நாடாளுமன்றத்தில் அளிக்கை செய்யப்பட்டது.

அடுத்த ஆண்டு (2026) வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நாளை (8) தொடங்கும். இந்த விவாதத்திற்கென மொத்தம் ஆறு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது வாசிப்பு மீதான ☞2

## கையூட்டு, ஊழல் குற்றச்சாட்டுக்களில் 57 அரச அதிகாரிகள் இதுவரை கைது

கையூட்டு அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் (ஸீணுபுயநுஸீ) வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஜனவரி 1 முதல் செப்டம்பர் 30 வரை) நடத்தப்பட்ட சோதனைகள் மூலம் 57 அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 20 அரசு நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகிப்பவர்கள். 20 பேர் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ஒரு முக்கிய உண்மை.

பொலிஸாரைத் தவிர, கல்வி அமைச்சகம், தொழிலாளர் பணியகம், நில சீர்திருத்த ஆணையம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை, சுகாதார அமைச்சகம், விவசாய சேவைகள் துறை, நீதி அமைச்சகம், மாகாண வருவாய் துறை, பிரதேச சபைகள் (உள்ளூர் மன்றங்கள்), இலங்கை போக்குவரத்துச் ☞2

## இனி இது .....

தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டில் உள்ள கொலன்னா பிரதேச சபையின் முதல் வரவு செலவுத் திட்ட முன்மொழிவு நேற்றுத் தோற்கடிக்கப்பட்டது.

கொலன்னா பிரதேச சபையின் மாதாந்திர அமர்வு இன்று (6) காலை 10:00 மணியளவில் தலைவர் சம்பத் குணசிங்க தலைமையில் தொடங்கியது. பிற்பகல் வாக்கெடுப்பு நடைபெற்றது, எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து அதைத் தோற்கடித்தன.

கொலன்னா பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்திக்கு 9 இடங்களும், சமகி ஜன பலவேகயவுக்கு 5 இடங்களும், இலங்கை பொதுஜன பெரமுனவுக்கு (SLPP) 3 இடங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு (UNP) 1 இடங்களும், சர்வஜன அதிகாரத்திற்க்கு 1 இடமும் உள்ளன.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 9 இடங்களை வென்ற போதிலும், அனைத்து எதிர்க்கட்சிகளும் கூட்டாக 10 இடங்களைப் பிடித்திருந்தாலும், தலைவர் பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்று கொலொன்னா பிரதேசசபையில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. அப்படியென்றால் எதிர்க்கட்சியிலிருந்து ஒருவர் ஆளும்தரப்பிற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இந்தத் தடவை அப்படி எதுவும் நடந்து விடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் (SJB) இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே மற்றும் முன்னாள் துணை சபாநாயகரும் இலங்கை பொதுஜன பெரமுன (SLPP) கொலன்னா தொகுதி அமைப்பாளருமான அஜித் ராஜபக்ச ஆகியோர் முன்னின்று உழைத்துள்ளனர்.

கடந்த சில நாட்களில் இவர்கள் இருவரும் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருடனும் கலந்துரையாடி, ஆளும் என்பிபிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயற்படுவதற்கான இணக்கத்தை ஏற்படுத்தினார்கள். குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சி (UNP) மற்றும் சர்வஜன பக்சயவின் ஆதரவைப் பெறுவதை உறுதிப்படுத்தியிருந்தார்கள். இனிவரும் நாட்களில் சபையில் எதிர்க்கட்சிக் கூட்டணியாக ஐக்கிய மக்கள் சக்தியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து செயல்படவேண்டும் என்றும் முடிவு செய்திருக்கிறார்கள்.

இந்த இணக்கப்பாடுகளின் அடிப்படையிலேயே வரவு செலவுத் திட்டத்தை முதல் வாசிப்பிலேயே தோற்கடிப்பது என்ற முடிவு எட்டப்பட்டிருக்கின்றது. இதன் விளைவாக, கொலொன்னா பிரதேச சபை வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து 9 வாக்குகளும் எதிர்த்து 10 வாக்குகளும் கிடைத்தன.

என்பிபிக்கு எதிரான இந்த நடவடிக்கை இந்தச் சபையுடன் நிற்காது, பொரும்பான்மை இன்றி ஆளும்தரப்பு அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள அனைத்துச் சபைகளிலும் தொடரும் என்று அஜித் ராஜபக்ச மற்றும் ஹேஷா விதானகே ஆகியோர் தெரிவித்தனர்.

இப்படி எதிர்க் கட்சிகள் வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதால் உடனடியாக எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. எப்படியும் இரண்டு வருடங்களுக்கு என்பிபிதான் இந்தச் சபைகளில் ஆட்சியில் இருக்கப் போகின்றது. இரண்டு வருட வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர்தான் சபையில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகும். அதுவரையில் என்பிபியே அதிகாரத்தில் தொடரும்.

ஆனால், ஆளும்தரப்பு செல்வாக்கிழந்து வருகின்றது, மக்கள் ஆதரவை இழந்து வருகின்றது என்று அரசியல் பரப்புரை செய்வதற்கு எதிர்க் கட்சிகளுக்கு இது பெரிதும் உதவும்.

..........................................................

பேலியகொடவில் பாடசாலை அதிபர் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார். அவரது மனைவி போலியகொட நகரசபையில் ஆளும்தரப்பான தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் என்பதையும் சொல்லியிருந்தேன். அங்கு மட்டுமல்ல யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் மகனும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் சகோதரனும் இவ்வாறு போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

தனது மகன் மற்றும் கணவர் ஆகியோர் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பேலியகொட பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் டிஸ்னா நிரஞ்சலா குமாரி தனது பதவியிலிருந்து நேற்று விலகிவிட்டார். போதைப்பொருளுக்கு எதிராக ஆளும்தரப்பு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில் அவர் பதவி விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாததுதான். அது நேர்மையான நடவடிக்கையும்கூட. ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் அரசுக் கட்சிகளின் உறுப்பினர்கள் தமது நெருங்கிய உறவுகள் கைது செய்யப்பட்ட பின்னரும் பதவி விலகாமல் இருக்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியதாக இருக்கின்றது.

மகனும், சகோதரனும் செய்த குற்றங்களுக்கு உள்ளூராட்சி உறுப்பினர்கள் என்ன செய்யமுடியும் என்கிற வறட்டு வேதாந்தங்களை எல்லாம் விட்டுவிட்டு, அவர்களின் குற்றங்களுக்கு தார்மீகப் பொறுப்பேற்று முன்மாதிரியாக இவர்களும் பதவி விலகவேண்டும். அவர்களாக விலகாவிட்டால், அவர்களை விலக கட்சித் தலைமைகள் நிர்ப்பந்திக்கவேண்டும். அதுதான் நியாயம். போதைப் பொருள் பயன்பாட்டை சமூகத்தில் இருந்து ஒழிப்பதற்கு இத்தகைய முன்னுதாரண நடவடிக்கைகள் அவசியம். இல்லையேல் நேர்மையற்றவை தமிழ்க் கட்சிகள் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டு மக்கள் மத்தியில் அவை மேலும் செல்வாக்கை இழக்க நேரிடும்.

இதற்கிடையில் பேலியகொட நகர சபை உறுப்பினரின் கணவரான பாடசாலை அதிபர் ஹெரோயின் கடத்தல்காரர்களுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டவர் என்றும் அவருக்கு துபாயிலிருந்தே போதைப் பொருள் அனுப்பப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். போதைப்பொருள் கடத்தல்காரர் 'கொஸ்கொட சுஜி' உடன் தொடர்புகளைப் பேணி வந்திருக்கிறார் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதிபரின் சகோதரரின் மகனான சஷி என்ற நபர் துபாயிலிருந்து இந்த ஹெரோயினை அனுப்பியிருக்கிறார். அதிபருக்குச் சொந்தமான ஹோட்டல் ஒன்றிலிருந்தே ஒரு கிலோ 20 கிராம் ஹெரோயின் சிக்கியது. பறிமுதல் செய்யப்பட்ட ஹெராயின் தெரு மதிப்பு இருநூறு மில்லியன் ரூபா என்று பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து அதிபரின் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் அங்கிருந்து எந்தப் போதைப் பொருளும் கைப்பற்றப்படவில்லை. எனவே தனது கணவன் தொழில் இடத்தில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டது தனக்குத் தெரியாது என்றுகூறி நிரஞ்சலா குமாரி தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்கு முயன்றிருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. தனது மகன் மற்றும் கணவரின் குற்றங்களுக்குத் தார்மீகப் பொறுப்பேற்றுப் பதவி விலகியுள்ளார்.

அந்த அறம் தமிழ் அரசியல்வாதிகளிடமும் காணப்படுமா? அவர்களும் பதவி விலகுவார்களா? அவர்கள் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகள் இதனைக் கவனத்தில் கொள்ளுமா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமாதத்துக்கு ஒருமுறை அதிகரிப்பதாகவும், வரியைக் குறைப்பதாகவும், அத்தியாவசிய உணவுபொருட்கள் மற்றும் மின்கட்டணத்தை குறைப்பதாகவும் குறிப்பிட்டது. ஆட்சிக்கு வந்தவுடன் எதுவும் நடக்கவில்லை.

சர்வதேசநாணயநிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயற்திட்டத்துக்கு அமைவாகவே ஆளும்தரப்புச் செயற்படுகிறது. தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாயின் ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயற்திட்டத்தில் இருந்து விலகவேண்டும்.

அரசியல் கட்சிகளில் உள்ள அனைவரும் தூய்மையானவர்கள், சிறந்தவர்கள் என்று எவருக்கும் சான்றிதழ் வழங்க முடியாது. தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் தமது கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் தூய்மையானவர்கள், ஏனைய அரசியல் கட்சி உறுப்பினர்கள் மோசடியாளர்கள் என்று குற்றஞ்சாட்டியது. தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் மீது போதைப்பொருள் குற்றச்சாட்டு தற்போது முன்வைக்கப்பட்டுள்ளதால் அனைவரும் அதனைப் பற்றியே பேசுவார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பற்றி அரசுத் தலைவர் தேர்தல் காலத்தில் பல விடயங்களைப் பேசினார். ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் தற்போது அரசியல் கைதிகள் எவருமில்லை என்று குறிப்பிடுகிறார்கள்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில்தான் தமிழ் மக்கள் இந்த ஆளும்தரப்புக்கு ஆணை வழங்கினார்கள். இந்த ஒரு வருடத்தில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஆளும்தரப்பு எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அரசமைப்பு சார்ந்த பிரச்சினைகள் பற்றி ஆளும்தரப்புடன் கலந்துரையாடுவதற்கு கடந்த ஜூன் மாதம் அனுமதி கோரியிருந்தோம். இதுவரையில் எமக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. ஆகவே வரவு செலவுத் திட்டத்தின் போது கடுமையான தீர்மானத்தை எடுப்போம்.

நவம்பர் 21 ஆளும்தரப்புக்கு எதிராகப் பேரணிக்கு எமது கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது, எனக்கும் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்கப்பட்டது. இருப்பினும் நாங்கள் செல்லப்போவதில்லை - என்றார்.

## இழப்பீட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

arations) காலியாக உள்ள நான்கு பதவிகளுக்கான நிலுவையில் உள்ள நியமனங்கள் தொடர்பாக இக்கடிதம் எழுதப்படுகிறது.

இந்த அலுவலகம் உத்தேசமாக வட மற்றும் கிழக்குப் பகுதி உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் ஒரு பொறிமுறை எனப் பொதுவாகக் கூறப்படுகிறது. பெரும்பாலும் நாட்டின் பாதுகாப்புப் படைகள் மேற்கொண்ட மீறல்களை ஈடுசெய்யும் வகையில் இழப்பீடுகள் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. தமிழ் மக்கள் எந்தவொரு உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறையையும் அல்லது நல்லிணக்கத்தையும் நிராகரித்துவருகின்றனர், ஏனெனில் இந்த நிறுவனங்களின் நியாயமான செயல்பாட்டிலோ சுயாதீனத்தன்மை மீதோ அவர்களுக்கு நம்பிக்கை இல்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் மேலே குறிப்பிடப்பட்ட அலுவகத்தை சார்ந்த மிகவும் கரிசனைக்குரிய ஒரு பிரச்சினையைச் சுட்டிக்காட்ட இக்கடிதம் எழுதப்படுகிறது. பாதுகாப்புத் துறை பின்னணி கொண்ட எந்தவொரு நபரும் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதால், எங்கள் மக்கள் இத்தனை நாட்களாக கூறிவந்ததும், அரசின் மனப்பான்மையையும் உறுதிப்படுத்தும் நிலை உருவாகும்.

சமீபத்தில் இழப்பீடுசெய்யும் அலுவகத்திற்கு நான்கு பெயர்கள் நியமனத்திற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளது. இதில் இருவர் பாதுகாப்பு துறை பின்னணி கொண்டவர்கள். இதற்கு மேலாக, ஐந்தாவது உறுப்பினர் மேஜர் ஜெனரல் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே வசந்தா பெரேரா (முன்னர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர்) மற்றும் ஜோசப் டெரன்ஸ் ஞானநந்தன் சுந்தரம் ஆகியோர் நியமிக்கப்படின், ஐந்து உறுப்பினர்களில் மூவர் பாதுகாப்பு துறையைச் சேர்ந்தவர்களாக இருப்பர். இத்தகைய அலுவகத்திற்கு ஒருவரும் அந்தத் துறையில் இருந்து வரக்கூடாது என்பது எங்கள் நிலைப்பாடு.

2025 நவம்பர் 5 அன்று வவுனியாவில் கூடிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு ஒருமனதாக தீர்மானித்து, தங்களுக்கு வசந்தா பெரேரா மற்றும் ஜோசப் டெரன்ஸ் ஞானநந்தன் சுந்தரம் ஆகியோரையும் இழப்பீடு செய்யும் அலுவகத்திற்கு நியமிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி எழுத ஒருமனதாக தீர்மானம் மேற்கொண்டுள்ளோம் என்றுள்ளது.

## கையூட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை (றீஸிவீய), பிரதேச செயலகங்கள், மகாவலி அதிகாரசபை, பூச்சிக்கொல்லி பதிவாளர் அலுவலகம் (பேராதெனியா), உள்நாட்டு வருவாய் துறை, சாலை பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, சாலை மேம்பாட்டு ஆணையம், வீட்டுவசதி மேம்பாட்டு ஆணையம், மோட்டார் போக்குவரத்துத் துறை மற்றும் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் ஆகிய அரசு நிறுவனங்களிலிருந்து லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் அதிகாரிகள் கைது செய்யப்பட்டதாக அறிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்வு வழங்கப்படவேண்டும் என்று அவை கோருகின்றன. இல்லையேல் டிசெம்பரில் பாடசாலை மீண்டும் தொடங்கும்போது அடையாள வேலை நிறுத்தம் செய்வோம் என்றும் அறிவித்துள்ளன.

இருப்பினும் பாடசாலை நேரம் அதிகரிக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் நேற்று அறிவித்தார். அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள புதிய கல்வி சீர்திருத்த செயல்முறையின் முன்னேற்றம் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் வகையில், கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் நேற்று கல்வி அமைச்சில் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அங்கு செயலாளர் தெரிவித்ததாவது:

புதிய கல்வி மாற்றம் நாட்டின் கல்வி முறையில் நீண்டகால மாற்றத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இது 2026 முதல் நடைமுறைக்கு வரும். சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் பயிற்சியாளர்களுக்கான பயிற்சியில் தேசிய கல்வி நிறுவனம் (ஹிஞுூசி) கிட்டத்தட்ட 99% பயிற்சியை முடித்துள்ளது. தரம் 1 மற்றும் தரம் 6 ஆசிரியர்களுக்கான பயிற்சி டிசெம்பர் 31, 2025க்குள் முடிக்கப்படும்.

இந்த இரண்டு தரங்களுக்கும் தேவையான அனைத்துப் பாடத் 106 தொகுதிகளும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அச்சிடப்படும்.

பாடசாலை நேரத்தை 30 நிமிடங்களால் நீட்டிப்பது தரம் 5 முதல் மேல் வகுப்புகளுக்கு பொருந்தும். புதிய கல்வி கட்டமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு பாடத்துக்கமான நேரம் 50 நிமிடங்களாக அதிகரிக்கப்படும்.

பொது போக்குவரத்து அட்டவணைகளை அதற்கேற்பச் சரிசெய்ய தொடருந்துத் துறை, பேருந்துத்துறை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணையத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஒன்பது மாகாணங்களிலும் மாகாணக் கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலை முதல்வர்களுக்கான நோக்குநிலை திட்டங்கள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. அவை இறுதி கட்டத்தில் இருக்கின்றன. பெற்றோருக்கான விழிப்புணர்வு அமர்வுகளும் டிசெம்பரில் நடைபெறும் என்றார்.

குழந்தைகளின் மன வளர்ச்சியுடன் ஒத்துப்போகவும், எதிர்கால வேலை உலகிற்கு அவர்களைத் தயார்படுத்தவும் ஏற்றதாக வடிவமைக்கப்பட்ட உலகளாவிய கல்வி முறைகளைப் படித்த பிறகு புதிய பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன என்று செய்தியாளர்கள் சந்திப்பில் தேசிய கல்வி நிறுவக இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் ஆகியோர் தெரிவித்தனர்.

## 2026 வரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பு நவம்பர் 14 அன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். குழு நிலை விவாதம் நவம்பர் 15 முதல் டிசம்பர் 5, 2025 வரை 17 நாட்களுக்கு நடைபெறும். மூன்றாவது வாசிப்பு வாக்கெடுப்பு டிசம்பர் 5 அன்று மாலை 6 மணிக்கு நடைபெறும்.

விவாத காலத்தில், பொது விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர, சனிக்கிழமைகள் உட்பட ஒவ்வொரு நாளும் வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெறும். மேலும், குழுநிலை விவாத காலத்தில், நாடாளுமன்றம் திங்கட்கிழமைகளில் காலை 9.30 மணிக்கும், மற்றைய அனைத்து நாட்களிலும் காலை 9 மணிக்கும் கூடும். அதன்படி, இந்தக் காலகட்டத்தில், நிலையியற் கட்டளைகள் 22(1) முதல் (6) வரையிலான அலுவல்கள் தவிர, வாய்மொழி பதில்களுக்கான ஐந்து கேள்விகளுக்கும், நிலையியற் கட்டளைகள் 27(2) இன் கீழ் ஒரு கேள்விக்கும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த காலகட்டத்தில், வரவு செலவுத் திட்ட விவாதம் மாலை 6 மணி வரை நடைபெறும் என்றும், வாக்களிக்கும் நாட்கள் தவிர, அனைத்து நாட்களிலும் மாலை 6 மணி முதல் மாலை 6.30 மணி வரை, ஆளும்தரப்புக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் 50:50 ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒத்திவைப்பு நேரத்தில் பிரேரணைகளுக்கு நேரம் ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

**எழுதுமட்டுவாழ் நகரில்**
**2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!**

*இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City




### உள்ளக வசதிகள்
- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**A** – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

**B** – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

**C** – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்



**0777 43 55 57**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொருளாதார ஒழுக்கத்தின் சோதனைக்கல்

இலங்கை அரசின் 2026ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கை (வரவு செலவுத் திட்டம் –Appropriation Bill) இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. பொருளாதார மறுசீரமைப்புகள், ஊழல் எதிர்ப்பு முயற்சிகள், அரசுடைமை நிறுவன மறுசீரமைப்பு (SOE reforms), ஏற்றுமதி வளர்ச்சி, வரி வசூல் மேம்பாடு, மற்றும் அரசுச் செலவுகளைக் குறைத்தல் போன்ற முக்கிய நடவடிக்கைகள் நடைபெறும் இக்கட்டத்தில், இந்த நிதி அறிக்கை ஒரு நிதி ஆவணமாக மட்டுமல்லாது நாட்டின் பொருளாதார ஒழுக்கத்தையும் அரசியல் நம்பகத்தன்மையையும் சோதிக்கும் தகுதித் தேர்வாகவே பார்க்கப்படுகிறது.

### நியாயமான சீர்திருத்தங்கள்

இலங்கை, கடந்தசிலஆண்டுகளில்அனுபவித்தபொருளாதாரநெருக்கடிகளின் பின்விளைவுகளிலிருந்து இன்னும் முழுமையாக மீண்டுவிடவில்லை. நாட்டின் வருவாய் குறைவு, கடன் சுமை அதிகரிப்பு, தொடர்ந்து கடன் பெறும் நிலை மற்றும் பணவீக்கம் போன்ற காரணங்கள், உறுதியான நிதி ஒழுக்கமும் நீண்டகால சீர்திருத்தங்களும் தேவைப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதியம் (IMF) வழங்கிய ஆதரவிற்காக இலங்கை அரசு ஏற்கனவே பல நிபந்தனைகளைக் கடைபிடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதனால், ஆளும்தரப்பு வெளிநாட்டு நிதியளிப்பவர்களுக்கு தன்னுடைய நம்பகத்தன்மையை நிரூபிக்க வேண்டும். அதேவேளை மக்களுக்குக் கூடுதல் சுமை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.

சீர்திருத்தங்கள் அவசியமானவை என்றாலும், அவை அவசரக் கடின நடவடிக்கைகளாக அல்லாது, நீண்டநோக்கு பார்வையுடனும் சமூக உணர்வுடனும் மேற்கொள்ளப்படவேண்டும். ஏனெனில், நிதி ஒதுக்கீடு மட்டுமின்றி, அதனைச் செயல்படுத்தும் திறனும், நிர்வாக ஒழுங்கும் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. எனினும், அவை வெற்றியடைய வேண்டுமானால், ஊழல் விசாரணை ஆணையம் (CIABOC), கணக்காய்வாளர் நாயகம், மற்றும் நீதித்துறை அமைப்புகள் ஆகியவற்றிற்குப் போதுமான நிதி வழங்கப்படவேண்டும். நீதி தாமதமாகக் கிடைப்பது மக்களிடையே நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகிறது. எனவே, நீதித்துறைத் திறனை வலுப்படுத்துவதும், நீதி வழங்கும் வேகத்தை அதிகரிப்பதும் இந்தப் நிதி அறிக்கையின் முக்கிய பொறுப்பாக இருக்கவேண்டும். நல்லாட்சி மட்டும் போதாது; பொருளாதார வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கும் துறைகளும் அதேபோல் கவனிக்கப்பட வேண்டும்.

### வரிச் சீர்திருத்தம்

பொது போக்குவரத்து துறையின் மேம்பாடு இப்போது ஒரு விருப்பத் தீர்வு அல்ல, அது ஒரு அவசியம். வாகன இறக்குமதிகள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைக் கடந்துள்ள நிலையில், புதிய பேருந்துகள் அல்லது தொடருந்துகள் வாங்குவதில் மட்டுமே கவனம் செலுத்தாமல், பணியிட ஒழுங்கு, பராமரிப்புத் தரம், பாதுகாப்பு, நேர்த்தி, மற்றும் பல போக்குவரத்து முறைகளின் ஒருங்கிணைப்பு ஆகிய அம்சங்களிலும் முதலீடு செய்ய வேண்டும்.

வரி வசூல் துறையும் அதேபோல் மறுசீரமைப்பை வேண்டுகிறது. மக்கள் வரிகளை மனப்பூர்வமாகச் செலுத்தும்படி செய்யும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆளும்தரப்பின் கடமையாகும். வரி வலயத்தை விரிவுபடுத்தி, நேரடி வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை உயர்த்துவது அவசியம். ஆனால் அதேசமயம், வரிகளையே ஒரே வருவாய் மூலமாகச் சார்ந்திருக்கும் பழக்கம், தொழில் வளர்ச்சியை அடக்கக்கூடியது. வருவாய் வளர்ச்சி, மூலதன முதலீடுகள், உற்பத்தி, ஏற்றுமதி போன்ற உண்மையான பொருளாதார நடவடிக்கைகளிலிருந்தே வர வேண்டும்.

இலங்கையில் இன்னும் முதலீட்டுக்கான "ஒற்றைச் சாளரம்" (single window system) நடைமுறைக்கு வரவில்லை. இதுவே வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பெரிய தடையாக உள்ளது. இந்தத் துறையில் வெளிப்படையான கொள்கை, திடமான நிர்வாகம், மற்றும் ஒரேபோல் பேசும் அரசியல் செய்தி தேவை.

### கடன் அடைப்பு சவால்

மேலும், 2028ஆம் ஆண்டில் மீண்டும் கடன் திருப்பிச் செலுத்தல் தொடங்கவிருப்பது நாட்டுக்கு பெரிய சவாலாகும். இதற்கான திட்டமிடல் இப்போதே தொடங்கப்படவேண்டும். அதற்காக அரசு கடன் நிர்வாகத்தையும் தேசிய முன்னுரிமைகளையும் ஒருங்கிணைக்க வேண்டியது அவசியம்.

அதேநேரத்தில், அரசுடைமை நிறுவனங்களை (SOEs) விரைவாக மறுசீரமைப்பது மிக முக்கியம். இந்நிறுவனங்கள் அரசின் நிதியில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. பாதுகாப்புத் துறையில் செலவுகளை குறைக்கும் முயற்சியும், அதேசமயம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திட்டமிடலும் அரசுக்கு கடினமான சமநிலையாக இருக்கும்.

### நலத்திட்டங்கள்

வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் மக்களின் வாழ்க்கைச் செலவை குறைப்பதாக இருக்கவேண்டும். நிலவும் பணவீக்கம் குறையும் வரை சமூக நலத்திட்டங்களை தொடர்வதோடு, வறுமையின் அடிப்படை காரணிகளைத் தீர்க்கும் வகையில், நீடித்த வருமானம் தரக்கூடிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவது தேவை. இது புதிய தொழிற்துறை முயற்சிகள், கிராமப்புற சிறு வியாபாரங்கள், மற்றும் மாற்றுத் தொழில் வாய்ப்புகள் மூலம் நடக்கலாம்.

அரசு கடந்த ஒரு வருடத்தில் பல முக்கிய முடிவுகளை மாற்றியமைத்துள்ளது. இது போதிய ஆலோசனையின்றி எடுக்கப்பட்ட முடிவுகளைக் காட்டும். கொள்கை மாற்றங்கள் அடிக்கடி நடைபெறுவது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பாதிக்கிறது. எனவே, இந்தப் நிதி அறிக்கையில் கொண்டு வரப்படும் திட்டங்கள் பங்காளிகள் (stakeholders) உடன் ஆலோசித்து உருவாக்கப்பட்டவையாக இருக்கவேண்டும், அப்போதுதான் தொடர்ச்சியான செயல்பாடும், வளங்களின் வீணாகாமையும் உறுதி செய்யப்படும்.

### பொறுப்புணர்வு அவசியம்

2026ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கை வெறும் எண்களின் தொகுப்பாக அல்லாது, ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை, மற்றும் பொறுப்புணர்வு கொண்ட பொருளாதார வரைபடமாக அமைய வேண்டும். இது நாணய நிதியத்திற்காக மட்டுமல்ல, இலங்கை மக்களுக்காகவும் ஒரு நம்பிக்கை ஆவணமாக இருக்க வேண்டும்.

சீர்திருத்தங்கள் நியாயமானவையாகவும், நிதி ஒழுக்கம் மக்களுக்குச் சுமையில்லாதவையாகவும் இருந்தால் மட்டுமே, இந்தப் நிதி அறிக்கை உண்மையில் ஒரு மாற்றத்தின் தொடக்கமாகக் கருதப்படும்.

## பக்கவாதத்திற்கு புதிய மருந்து இலங்கையில் கண்டுபிடிப்பு



உலகளாவிய இருதய சிகிச்சையை மறுவரையறை செய்வதற்கான ஒரு திருப்புமுனை இலங்கையில் இருந்து உருவாகியுள்ளது, ராகமாவில் உள்ள களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம், உலக மருத்துவ வரலாற்றில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கும் என்று நிபுணர்கள் கூறும் ஒரு முன்னோடி மருத்துவத்தை வெளியிட்டது.

ஒக்டோபர் 22, 2025 அன்று பார்சிலோனாவில் நடந்த உலக பக்கவாதம் மாநாட்டில் முதன்முறையாகக் காட்சிப்படுத்தப்பட்ட இந்த கண்டுபிடிப்பு, இருதய சிகிச்சைத் துறையில் ஒரு சாத்தியமான மாற்றத்தை ஏற்படுத்தும் மருந்தாகப் பாராட்டப்படுகிறது.

இந்த கண்டுபிடிப்பின் வழிகாட்டிகளில் ஒருவரான நரம்பியல் நிபுணர் மருத்துவர் பிம்சாரா சேனநாயக்க, மூன்று வகையான உயர் குருதி அழுத்த எதிர்ப்பு மருந்துகள் ஒரே மாத்திரையில் இணைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்பட்ட எங்கள் ஆராய்ச்சி, இந்த ஒற்றை டோஸ் உயர் குருதி அழுத்தம் காரணமாக உடைந்த குருதி நாளங்களால் ஏற்படும் பக்கவாத அபாயத்தை வியக்கத்தக்க வகையில் 60% குறைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

கிட்டத்தட்ட 80 சதவீத பக்கவாதம், குருதி நாளங்கள் அடைப்பதாலோ அல்லது வெடித்த தமனிகளில் இருந்து குருதிப்போக்கு ஏற்படுவதாலோ நிகழ்கிறது. சரியான குருதி அழுத்தக் கட்டுப்பாட்டின் மூலம், இந்தப் புதிய மருந்து இரண்டாவது பக்கவாதத்தின் அபாயத்தை 60 சதவீதம் வரை குறைக்க முடியும் என்பதை எங்கள் கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன, என்றும் மருத்துவர் சேனநாயக்க கூறினார்.

பார்சிலோனாவில் சேனநாயக்கவுக்கு ஒரு சிறப்பு உலகளாவிய பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

## வெலிகம பிரதேச தவிசாளர் கொலையை கண்டித்து நேற்று பியகமவில் ஆர்ப்பாட்டம்

வெலிகம பிரதேசசபைத் தலைவர் லசந்த விக்ரமசேகர சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து, பியகம பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தி (ஸ்ரீமூய) உறுப்பினர்கள் நேற்று சபை கூட்ட மண்டபத்தின் முன் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பியகம பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திற்கு முன்னதாக இந்தப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் பிரதேச சபையின் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களால் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதற்கிடையே, வெலிகம பிரதேச சபைக்கு புதிய தலைவரை நியமிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வெலிகம பிரதேச சபையின் புதிய தலைவர் நவம்பர் 28 நியமிக்கப்படுவார் என்று வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெலிகம பிரதேசசபையின் முன்னாள் தலைவர் லசந்த விக்ரமசேகர ஒக்டோபர் 22 துப்பாக்கிதாரியால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

## நிதித் திருட்டுக்கு உதவி செய்த வங்கி ஊழியர் சிஐடியால் கைது

தனியார் வங்கி ஊழியர் ஒருவர் ரூ. 23 லட்சத்திற்கும் அதிகமான தொகையை மோசடி செய்வதற்காக மற்றொரு நபருக்கு கணினித் தகவல்களை வழங்கிய மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் துறையால் (ஸீஊரம்) கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை நவம்பர் 20 வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதிவான் அசங்க எஸ். போதரகம நேற்று உத்தரவிட்டார்.

சம்பவம் குறித்து மேலும் ஒரு பி அறிக்கையை சமர்ப்பித்த விசாரணை அதிகாரிகள், ஒரு பெரிய தனியார் வங்கியில் பணிபுரியும் நபர் வங்கியின் அமைப்பிலிருந்து தரவை மற்றொரு நபருக்கு வழங்கினார் எனவும், இதன் மூலம் ரூ.23 லட்சத்திற்கும் அதிகமான தொகையை வங்கியிலிருந்து சுருட்டினார்கள் எனவும் தெரிவித்தனர்.

இந்தக் குற்றத்தில் ஈடுபட்ட மற்றைய நபரும் ஒரு வங்கி ஊழியர் என்றும் அவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

# என்ன செய்யப் போகிறார்கள்?

**என்.சத்தியமூர்த்தி**



நவம்பர் 21 தென்னிலங்கையில் உள்ள பல்வேறு எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசுத் தலைவர் அநுரகுமாரவின் அரசிற்கு எதிராகப் போராட்டம் நடத்தவிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தில் இருந்து முக்கிய எதிர்கட்சியான சஜித் பிரேமதாச தலைமை வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி இன்றுவரை விலகியே நிற்கிறது. அது சார்ந்த அரசியல் வேறு பாதையில் சென்று கொண்டு இருக்கிறது.

இது போதாது என்று, எதிர்கட்சிகளின் நுகேகொட பேரணியில் பங்குபெறுவதாக அறிவித்திருந்த மனோ கணேசன் தலைமையிலான மலையகத் தமிழர்களின் தமிழ் முற்போக்குக் கூட்டணி, தன் முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பேரணிக்குத் தங்களது தார்மீக ஆதரவை மட்டும் தெரிவிப்பதாகவும் அந்தக் கூட்டணி அறிவித்துள்ளது.

மனோ கணேசன் அணியைப் பொறுத்தவரையில், அவர்களுடைய அரசியல் நிர்பந்தம் வேறு. மலையகத்தில், பல தசாப்தங்களாகத் தற்போதைய ஆளும் ஜேவிபிக்கு எதிராக உயிரை பணயம் வைத்துப் போராடி வந்திருக்கிறார்கள். சஜித் பிரேமதாசதனிக்கட்சி தொடங்கிய காலம் முதல் அதனோடு இணைந்து பணியாற்றி வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு தேர்தல் அரசியலில், மற்ற தென்னிலங்கை அரசியல் தலைமைகளைவிட, சஜித் கூட்டணியில் தொடர்வது காலத்தின் கட்டாயம். இதுவே. வேறு பல சிறிய கட்சிகளுக்கும் பொருந்தும். அவர்களுடைய முடிவை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

### அரசியல் கூத்து

இந்தப் பின்னணியில், தற்போதைய கேள்வியே, அந்தப் போராட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகள் என்ன செய்ய போகின்றன என்பதுதான். அவர்களில் ஒருவரோ, பலரோ, அல்லது அனைத்துத் தரப்பினருமோ, போராட்டத்தை ஆதரித்து, அதில் பங்கு பெறப் போகிறார்களா, அல்லது அது தென்னிலங்கையின் அரசியல் கூத்து மட்டுமே என்று ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கப் போகிறார்களா?

உண்மை என்னவோ, தற்போதைய சூழலில், பிரிந்து நிற்கும் வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தலைமைகளின் பொது எதிரி, நாட்டை ஆளும் அநுரவின் ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணி மட்டுமே. இன்னும் சொல்லப்போனால், இன்று எதிர்கட்சிகள் போராட்டத்தில் இருந்து தனித்து நிற்கும் பிரேமதாச கட்சிகூட, நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் எல்லாம் தமிழ் கட்சிகளின் 'எதிரி' தான். அரசுத் தலைவர் தேர்தலில் மட்டுமே தமிழ் தலைமைகள் எந்த தென்னிலங்கை தலைவரை ஆதரிப்பது என்ற விடயத்தில் குட்டையைக் குழப்புவார்கள்.

தாங்களாக அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் பொது வேட்பாளர் என்று ஒருவரைக் களமிறக்க அவர்கள் தயாரில்லை. அவ்வாறுதான், கடந்த அரசுத் தலைவர் தேர்தலில் அரியநேத்திரனை, ஒரு சாரார் மட்டுமே களமிறக்கி, சரியாகத் தேர்தல் பணிகளை முன்னெடுக்காமல், அவரை அலைக்கழித்து அவமானப்படுத்தினார்கள். ஆனால், தேசிய அளவில் அவமானப்பட்டது தமிழ் சமூகமே.

### இன பாசமா?

இலங்கை தமிழ் இனமாக அடையாளம் காணப்படும் மக்களை, விடுதலைகள் புலிகள் அமைப்பு தானாக, தான்றோன்றித் தனமாக அடையாளம்காட்டிக்கொண்ட மூன்றுதசாப்தங்களுக்கு ஜேவிபியுடன் ஒரு விசித்திர உறவு இருந்தது. அது குறித்து வர்ணனைகள் பல அப்போது இருந்தாலும், அதன் காரண-காரியங்கள் இன்றுவரை யாருக்குமே புலப்படவில்லை.

அன்றானாலும், இன்றானாலும், தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை அடிப்படையாக எதிர்ப்பதில் ஜேவிபி தெளிவாக இருந்தது. தென்னிலங்கையின் முக்கிய அரசியல் தலைமைகள் தங்களது தமிழர்-எதிர்ப்பு அரசியலுக்குப் பல்வேறு சாயங்கள் பூசினாலும், ஜேவிபி மற்றும் ஜேஎச்யூ ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே தங்களது எதிர்ப்பை தெரிவிக்க வார்த்தை விளையாட்டில் ஈடுபடவில்லை.

இருவரில், ஜேவிபி மட்டுமே தென்னிலங்கையில் பல பகுதிகளிலும் அரசியலில் பங்குதாரர்களாக இருந்தனர். அந்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெற்றார்களா என்பது வேறு விடயம். ஆனால், 1965இல், ரோஹண்ண விஜயவீர, ஜேவிபி என்ற போராளி அமைப்பை உருவாக்கிய காலம் தொடங்கி, அவரது காலத்திற்குப் பின்னர் அந்த அமைப்பு நாடாளுமன்ற அரசியல் மற்றும் தேர்தல்களில் பங்குபெறும் அரசியல் கட்சியாக உருமாறிய காலம் தொடர்ந்தும் அவர்களது தமிழ்-எதிர்ப்பு கொள்கையில் மாற்றம் இருக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றம் சென்று அதனை இல்லாதாக்கிய பெருமை ஜேவிபி என்ற அந்தக் கட்சியினரையே சாரும். அவர்களை நேரடியாக ஆதரிக்கவில்லை என்றாலும், அதே நோக்கில் பயணித்த பெருமை, விடுதலை புலிகள் அமைப்பிற்கு உரித்தானது.

அதோடு நின்று விடவில்லை. எடுத்ததற்கும் கவிழ்த்ததற்கும் எல்லாம், பிற தென்னிலங்கை தலைவர்களை மட்டுமல்லாது, அமிர்தலிங்கம் உள்ளிட்ட தமிழ் தலைவர்களையே படுகொலை செய்து பழக்கப்பட்ட விடுதலை புலிகள் அமைப்பு, ஜேவிபி சார்ந்த எந்தவொரு தலைவரையோ, தொண்டரையோ சீண்டிப் பார்த்ததாகச் சரித்திரம் இல்லை. அது போன்றே, அவர்களது போராளிகள் காலத்தில்கூட, ஜேவிபி, மலையக தமிழர்களையும்சிங்கள அரசியல்தலைவர்களையும் குறிவைத்து தாக்கினாலும், வட மாகாண தமிழர்களையோ, அதிலும் குறிப்பாக அன்றைய தமிழ் போராளி குழுவினரையோ தாக்குவதற்கு நினைத்ததே இல்லை.

ஒரு கட்டத்தில், தமிழ் போராளி குழுக்கள் என்ற அடைமொழி விடுதலை புலிகள் அமைப்பிற்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. ஜேவிபியின் 1987-89 இரண்டாவது கிளர்ச்சி, ஏராளமான உயிர் இழப்புகளோடு படுதோல்வியில் முடியும் வரையில், விடுதலை புலிகள் அமைப்பு, இலங்கைத் தமிழர் அரசியல், அது சார்ந்த ஆயுதப்போர் மற்றும் சர்வதேச பிரசன்னம் ஆகியவற்றில் முன்னணி நிலைமையை அடைந்து, அதனை தக்க வைத்துக்கொண்டிருந்தது.

ஆனாலும், இந்த இரு அமைப்பினரும் அடுத்தவருக்கு எதிராகத்துப்பாக்கியைத்தூக்கியது இல்லை. துப்பாக்கி குண்டுகளை வீணாக்கியது இல்லை. குறிப்பாக திட்டம் தீட்டி 'பழிவாங்கும்' விடுதலை புலிகள் அமைப்பின் தலைமை, ஜேவிபி-யை கண்டு கொண்டதே இல்லை. ஏன் இந்த இனம் தாண்டிய பாசம்? அல்லது அதுதான் இன பாசமா? அல்லது, வேறு ஏதாவது காரணமா? நியாயப்படுத்தல்களா?

### எம்.பி-க்கள் எம்மாத்திரம்?

தற்போதைய அரசியல் சூழலில், தமிழ் தலைவர்கள், குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலருக்காவது, ஆளும் தரப்பை எதிர்த்து அரசியல் செய்யத் தோதுப்படாது. ஊழல் குற்றச்சாட்டில் ஆனானப்பட்ட முன்னாள் அதிபர் ரணில் விக்கிரமசிங்கவையே கைது செய்து, நீதிமன்றங்கள் செயல்படாத, சனி-ஞாயிறு தினங்களில் சிறையில் அடைத்த இந்த ஆளும்தரப்பிற்கு, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மாத்திரம்?

ரணிலை குறித்து பல்வேறு வழக்குகளை முன்னெடுக்க முடியுமாயிருக்கும். ஆனால், அவற்றில் மிகவும் சாதாரணமான வழக்கு ஒன்றை முன்னெடுத்ததன் மூலம், அரச தலைமை தங்களது திட்டத்தை வெளிபடுத்திவிட்டது. ரணிலின் கைது ஒரு செய்தியை கூறியது. அதாவது, தாங்கள் நினைத்தால், நாட்டில் எந்தவொரு அரசியல் தலைவருக்கும் எதிராக குற்றசெயல்கள் குறித்து விசாரணையை முடுக்கிவிட முடியும் என்பதுதான்.

என்றாலும், இந்தப் பின்னணியில், அரசை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா, என்ற முடிவை தமிழர்தரப்புகள் தனியாகவும் கூட்டாகவும் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி உள்ளனர். அவர்களது வழமையான இனப்பிரச்சினையை முன்னிறுத்தி எடுக்கப்படும் முடிவுகள் அரசை எதிர்த்தே அமையும். ஆனால், முடிவு எதுவாக இருந்தாலும், அது சமகால அரசியல் நிலைமையை மட்டுமே மனதில் கொண்டு எடுக்கப்பட வேண்டும்.

காரண-காரியங்கள் எதுவாக இருந்தாலும், தற்போதைய வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சமூக-அரசியல் சூழலில், தமிழர் தரப்புகளுக்கு முக்கிய தேர்தல் எதிரி ஜேவிபி தலைமையிலான ஆளும்தரப்பு மட்டுமே. நாடாளுமன்றத் தேர்தலில் இழந்தவற்றில் கணிசமான ஒரு பகுதியை பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில், தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான கூட்டணி மீட்டெடுத்தது. உண்மை.

என்றாலும், எதிர்காலத்திலும், ஜேவிபி-என்பிபியே தமிழ் அரசியல் கட்சிகளின் தேர்தல் எதிரி என்பது தற்போது உறுதியாகி உள்ளது. அதில் மாற்றம் வரவேண்டுமானால், தேசிய அளவில் ஆட்சி மாற்றம் வரவேண்டும். அப்போது மட்டுமே, அதிபர் தேர்தலை மட்டுமாவது மனதில் வைத்து, பிற தென்னிலங்கை கட்சிகள் தமிழர் தரப்பினருடன் ஒட்டுறவாடுவார்கள்.

### ஆட்சி அனுபவம்

இந்தப் பின்னணியில், சஜித் தலைமையிலான அணி பிற எதிர்கட்சியினரின் பொதுகூட்ட மேடையைப் பகிர்ந்துகொள்ளமாட்டோம் என்பது ஆட்சியாளர்களுக்கே சாதகமாக முடியும். அவரது தலைமையின் பின்னால், இரண்டாவது அதிக எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து நின்றாலும், தொடர்ந்து அவர் தன்னை ஒரு சுயநலவாதி என்று காட்டிக்கொள்வாரேயானால், அவரது கட்சித் தொண்டர்களே தாய் கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்குப் படையெடுக்க மாட்டார்கள் என்று சொல்ல முடியாது.

அதுபோலவே, சஜித்தின் தற்போதைய புறக்கணிப்பு, பிற தென்னிலங்கை எதிர்கட்சிகளின் முன்னிலையில் நாமல் ராஜபக்சவை முன்னணியில் நிறுத்தி உள்ளது. அவருக்கு தமிழர் ஆதரவு இல்லை என்பது மட்டுமல்ல. அவருக்கு தற்போதைய தேசிய பொருளாதாரத்தை முன்னெடுத்து செல்வதற்கு தேவையான அரசு அனுபவமும் இல்லை. ஒரு விதத்தில், சஜித்திற்கும் தேவையான அளவிற்கு ஆட்சி அனுபவமும் அரசியல் முதிர்ச்சியும் இல்லை. அதுவே, அதிபர் அநுரவிற்கும் பொருந்தும்.

### தற்கொலைக்குச் சமம்

இந்தப் பொதுவான பின்னணியில், தமிழர் தரப்பு சஜித் பிரேமதாசவுடன் தங்களை அடையாளம் காட்டிக்கொள்வது எதிர்காலத்திற்கு நல்லது. அல்லது அது ஏற்புடைய ஒரு விவாதப்பொருள். அதிபர் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற கேள்விக்கு பதில் சஜித்தின் பெயராகதான் இருக்கும். காரணம், அநுர தரப்பு, தற்போது தமிழர் பகுதிகளில் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு எதிராகத் தேர்தல் அரசியலை முன்னெடுத்து ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது. தற்போதைய அரசிற்கு ஆதரவாகத் தமிழர் தரப்பு முடிவு எடுத்தால், அது தற்கொலைக்குச் சமம்.

அதேசமயம், நாமல் தலைமைக்கு ஆதரவளிக்க எந்த தமிழ் தலைமையும் முன் வராது. இதில் வேடிக்கை என்னவென்றால், இனப்போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், அப்போதைய மகிந்த ராஜபக்ச அரசுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து, நார்-நாராக விவரித்து உரையாடியது அப்போதையதமிழ் அரசுகட்சியின்தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமே. ஆனால், அந்த கூட்டமைப்புத்தான், திடீரென்று ஞானம் பிறந்து, அதே அரசை எதிர்த்து போர் குற்றம், பொறுப்பு கூறல் என்றெல்லாம் அரசியல் செய்தது.

இந்தப் பின்னணியில்தான், தற்போதையே அரசிற்கு எதிரான பல கட்சிகள் நுகேகொட பேரணிக்கு அழைப்பு விட்டுள்ளன. இங்குள்ள தமிழ் தலைமைகள் என்ன செய்ய போகின்றன, என்ற கேள்வி எழுந்துள்ளது. அதிலும் அவர்கள் தனித்தா, அல்லது கூட்டா, என்ற கேள்வியும் முன்னிற்கிறது. அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள், அல்லது, என்னதான் செய்யப் போகிறார்கள்?

காலைக்கதிர் Kalaikkathir

## பேலியகொட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் தலைமைச் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபரான அவரது கணவர் போலியகொடவில் நடத்தி வந்த ஹோட்டலில் இருந்து ஒரு கிலோ 20 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைப் பொலிஸார் கைப்பற்றினர். அதற்கு முன்னதாக ஹெரோயினை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அவரது மகனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டணியோடு தலைவரும் நானும் ஏற்கனவே சில சந்தர்ப்பங்களில் உரையாடி இருக்கின்றோம். எங்களுடைய நிலைப்பாட்டை அவர்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம். அந்த நிலைப்பாட்டிற்கு அவர்களும் இணங்கி வருவார்களாக இருந்தால் நாங்கள் முன்னர் இருந்ததைப் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரோடு இணங்கிச் செயற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆகவே, அப்படியாக இணங்கிச் செயற்பட முன்வருமாறு நாங்கள் அவர்களுக்கு அழைப்பும் விடுக்கின்றோம். மத்திய செயற்குழுவிலே அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரோடும் நாங்கள் இது சம்பந்தமாக பேசலாமா என்ற விடயமும் மத்திய செயற்குழுவில் ஆராயப்பட்டது. பிரதான தலைமைத் தமிழ்க் கட்சி என்ற ரீதியில் எம்மோடு இணைந்து செயற்பட வருமாறு சகல தமிழ்த் தரப்புக்களுக்கும் அழைப்பு விடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுரேஸ் பிரேமச்சந்திரன், 'தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் கூட்டமைப்பாக ஒன்றிணைந்து செயற்படுவதற்கு சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் சில நிபந்தனைகளைக் கூறியுள்ளார். அவை என்ன நிபந்தனைகள் என இதுவரை தெரியாது. பேச்சு ஊடாக இணைய முடியும். பேசுவதற்கு முன்னர் நிபந்தனைகளை முன்வைப்பது பொருத்தமில்லை' என்றார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண ஆட்சி முறைகளை விடுத்து ஆளுநர் மூலம் ஆட்சியை நடத்துவதனை ஆளும்தரப்பு நிறுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆளும்தரப்பு எல்லை நிர்ணயம் செய்யவேண்டும் எனக் கூறி வருகிறது. இதனடிப்படையில் பார்க்கும்போது அடுத்த வருடமும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நிலைப்பாட்டில் ஆளும்தரப்பு இல்லை எனச் சுட்டிக்காட்டிய சுரேஸ், எல்லை நிர்ணய வேலைகளை விரைவில் மேற்கொண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைத்துப்பாக்கிகளை கோரியிருப்பது அவர்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக இருக்கலாம். கடந்த ஆளும்தரப்புகள் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்கியிருந்தன. இந்த ஆளும்தரப்புப் பாதுகாப்பு வழங்காத நிலையில் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கலாம். ஆளும்தரப்பு முதலில் பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கவேண்டும் - என்றார்.

## 2028இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமில்லை. 13ஆவது திருத்தத்தை செயல்படுத்துவது குறித்த எங்கள் நிலைப்பாடு மிகவும் தெளிவாக உள்ளது' என்றும் அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

'ஒரு தீவிர எதிர்க்கட்சியாக, நாங்கள் மக்களுக்காக நிற்கிறோம். பரந்த பொருளில் மக்களின் உரிமைகள் மற்றும் மனித உரிமைகளை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். பொதுமக்கள் சாதாரண அரசியலுடன் உடன்படுவதில்லை. எனவே, அரசியல் படிநிலையில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேசியக் கொள்கைகள் வகுக்கப்படவேண்டும் என்பதே மக்களின் விருப்பம். அந்த இலக்குகளை அடைய நாங்கள் எங்கள் சொந்த அரசியல் உத்தியின்படி செயல்படுகிறோம்' என்றும் தெரிவித்தார். எதிர்க் கட்சிகளின் கூட்டுப் பேரணி தொடர்பில் பேசும் போது இதனைத் தெரிவித்திருந்தார்.

ஆளும்தரப்புத் தனது முக்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடிந்ததா, 2028ஆம் ஆண்டுக்குள் சர்வதேச கடன்களை அவர்களால் திருப்பிச் செலுத்த முடியுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், வெளியிடப்பட்ட அறிக்கைகளுக்கும் நடைபெறும் நடவடிக்கைகளுக்கும் இடையே ஒரு முரண்பாடு இருப்பதாக நான் தெளிவாகக் கூற முடியும். 2028 எங்களுக்கு மிகவும் முக்கியமானது. அதற்குள், நமது பெரும் வெளிநாட்டு கடன் கடமைகளை நாம் பூர்த்தி செய்யவேண்டும். அதைச் செய்ய, நமக்கு விரைவான பொருளாதார வளர்ச்சி, சிறந்த அந்நியச் செலாவணி இருப்பு, ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி சார்ந்த வருமானத்தில் பெரிய முன்னேற்றம் இருக்கவேண்டும். நமது வெளிநாட்டு பணம் அனுப்புதல் மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதை உறுதி செய்யவேண்டும். மிக முக்கியமாக, நமக்குப் பெரியளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இருக்கவேண்டும். இந்தத் துறைகள் அனைத்திலும், நாம் தேவையான இலக்குகளை அடைவதாகத் தெரியவில்லை. நாம் மிக மெதுவாக நகர்கிறோம். 2022இன் மறுநிகழ்வாக 2028 இருக்கக்கூடாது. எனவே, ஒரு நாடாக, இதுபோன்ற சமூக முறிவு மீண்டும் நடக்காமல் இருக்க நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஆனால் அது மிகவும் சவாலானது. உறுதியான மற்றும் சரியான அணுகுமுறையுடன் கூடிய உண்மையான வளர்ச்சிக் கொள்கையை நாம் கொண்டிருக்கவேண்டும்' என்றார்.

டொனால்ட் டிரம்பின் வரிகள் இலங்கையின் மீதான தாக்கம் குறித்தும், அவற்றைப் பற்றி அவர் கவலைப்படுகிறாரா என்றும் கேட்டபோது, 'எங்கள் வர்த்தகம் பன்முகப்படுத்தப்படவில்லை என்பதுதான் எங்கள் பிரச்சினை. எனவே, ஒரு நாடாக, ஏற்றுமதிச் சந்தைகளைப் பன்முகப்படுத்துவதற்கான கொள்கையை நாம் ஊக்குவிக்கவேண்டும். அந்த வரிவிகிதங்களை 20%க்கும் குறைவான நிலைக்குக் கொண்டுவர அமெரிக்க நிர்வாகத்துடன் ஆக்கப்பூர்வமாகவும் உற்பத்தி ரீதியாகவும் நாம் பணியாற்ற வேண்டும்' என்றார்.




உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# சைவமும் தமிழும்

அன்பே சிவம் அன்பில் வளர்ந்ததே சைவம் என்று திருமூலர் கூறிய அருஞ்சொற்றொடர் நாம் அனைவருக்கும் சைவத்தைப் பற்றியும் தமிழைப்பற்றியும் அறிந்து கொள்வதற்கு பெருந்துணையாக விளங்குகின்றது. ஆனாலும் சைத்தினதும், தமிழினதும் வளர்ச்சிப் பாங்கு என்பது தற்காலத்து சூழலில் எவ்வாறு உள்ளது என்பதோடு அதில் எவர் எவருக்கெல்லாம் பங்கு உள்ளது என்று ஆராய்ந்தால் தமிழனாய்ப் பிறந்த அனைவருக்குமே பங்கு உண்டு. ஆனால் தற்போது எல்லோரையும் எதிர்பார்த்து நிற்காமல் இளையோரை எதிர்பார்த்து நிற்கவேண்டிய சூழல் ஏற்பட்டு விட்டது.

அவ்வளவிற்கு சைவமும் தமிழும் வளர்ச்சிப் பாதையில் செல்லாது சற்று தளர்வடைந்து பின்னோக்கிப் போவதே காரணம். நாம் அனைவரும் முதலில் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். சைவத்தமிழ் என்றால் என்ன என்பதை, அதாவது தமிழ் சமுதாயத்தில் சைவம் என்பது ஆன்மீகத் தழுவலான ஓர் அடையாளம். அது மட்டுமன்றி மெய்கண்ட சைவ சித்தாந்தத்தின் அடிப்படையாக ஒரு அடிப்படைப் பொருளாக அமைந்துள்ளதோடு பல நூற்றாண்டுகளாக இலக்கியம், கலை, வாழ்வியல் மற்றும் சமூகவியலின் வழியாக வளப்படுத்திவரும் ஒரு சிறந்த அம்சமாகும்.

சைவத்தமிழ் சங்ககாலம் தொட்டே வளர்ந்துதான் வந்தது. ஆனால் தற்கால கட்டத்தில் சைவத்தமிழின் வளர்ச்சி குன்றி விடுமோ என்ற அச்சமும் இருந்து கொண்டுதான் உள்ளது. ஏனெனில் அன்றைய காலகட்டத்தில் அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தனது இரு கண்களைப்போல கருதி சைவத்திற்காகவும் தமிழின் வளர்ச்சிக்காகவும் பெரிதும் பாடுபட்டார். தனது வாழ்க்கையையே துச்சமாக எண்ணி சைவத்திற்கும் தமிழிற்கும் மட்டுமே தொண்டாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் தனது வாழ்க்கைக் காலத்தைக் கழித்தார். ஒன்றா? இரண்டா? எவ்வளவு பணிகளை மேற்கொண்டு சைவத்தினதும் தமிழினதும் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். நூல்களைப் படைத்தும், சொற்பொழிவுகள் மற்றும் பரப்புரைகளை மேற்கொண்டும் வளர்த்து வந்தார் என்றால் மிகையாகாது. முக்கியமாக பாலபாடம் மற்றும் சைவ தமிழ் வினாத் தொகுப்புகள் என்று பல நூல்களை வெளியிட்டு அக்காலத்தில் அன்பே சிவம் தமிழே உயிர் என்ற அற்புத பொன்மொழிக்கு இணங்க வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தவரே ஆறுமுக நாவலர். அக்காலத்தில் இவர் மட்டுமல்ல அதற்கு முந்தைய சோழர் காலம், பல்லவர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் சைவத்திற்கும் தமிழுக்குமாக பெரிதும் உழைத்தார்கள்.

நாயன்மார்கள் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்றவற்றை அருளிச் சென்றமை சைவத்திற்கும் தமிழுக்குமான ஓர் ஆழமான அடித்தளம். முற்றும் தமது வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து நற்கருமங்களைப் பற்றியும் எடுத்து இயம்புகின்றது. அதாவது சைவ சித்தாந்தத்தை நோக்குவோமானால் ஆன்மா இறைவனை அடைய மூன்று எழுத்து தத்துவமான பதி, பசு, பாசம் என்பவை வழிகாட்டுகின்றன. இவை மட்டுமன்றி சைவ சமயத்தில் அனைத்துமே நமது வாழ்வியல் நடவடிக்கைக்கு நாளாந்தம் ஒரு நற்கருத்தையே புகுத்துகின்றது. உதாரணமாக, சைவ சமய புராணங்களான கந்தபுராணம், சிவபுராணம், பெரிய புராணம், கருட புராணம் போன்ற புராண நூல்கள் ஒவ்வொன்றுமே ஏதோவொரு விழுமியக் கருத்தையே புலப்படுத்துகின்றது. இவ்வாறு நற்கருத்துக்களைப் புலப்படுத்தி நின்றமையாலே அதனை யாவரும் படித்து அது தொடர்பான ஆழமான கருத்தை விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும் என்ற நோக்கோடு அன்றே திருமுறை ஓசை மங்காதபடி இளையோர் மனதில் ஒலிக்கட்டும் என்று கூறினார்கள்.

இவ்வாறு எல்லாம் சைவத்தைப் பற்றி கூறிச்சென்றாலும் அந்த சைவமும் தமிழ் என்ற ஒரு மொழியில் வளர்ந்ததால் தான் இன்றும் ஒரு பசுமைத்தோட்டம் போல அதன் பழமையை பாதுகாத்தபடி புதுமையைஷ்யும் வரவேற்க தயாராக விளங்கி வேரூன்றி நிற்கின்றது. இவ்வாறு எல்லாம் சைவமும், தமிழும் காணப்பட்டாலும் தற்போதைய காலகட்டத்தில் இளையோரை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. ஏனெனில் அன்று சைவத்தையும், தமிழையும் வளர்க்க பெரியோர்கள், நாயன்மார்கள், புலவர்கள், ஆழ்வார்கள் எனப்பலர் இருந்தார்கள். அவர்களின் மறைவின் பின் இன்றைய கால இளையோராகிய நாமே சைவத்தையும் தழிமையும் பாதுகாத்து போற்ற வேண்டிய கடமை உரியவர்களாக தற்காலத்தில் உள்ளோம். ஆனால் இன்றைய இளைஞர்களோ ஆன்மீகத் தேடலுக்கும், அடையாளத் தேடலுக்கும் இடையே பயணிக்கிறார்கள்.

இவர்களுக்கு சிவஞான போதகம், சைவசித்தாந்தம், திருவாசகம், திருமந்திரம் தேவாரப் பாடல்கள் போன்றவைதான் ஆழமான அடித்தளத்தைத் தரக்கூடியவை. ஆன்மீக கலை நிகழ்ச்சிகள், மொழிபெயர்ப்பு முயற்சிகள் மற்றும் சமூக ஊடகங்களில் சைவப் பாரம்பரியத்தைப் பகிரும் முயற்சிகள் போன்றவற்றை மேற்கொண்டால் இவை இளையோரை ஈர்க்கும் பாலமாக அமையும்.

தற்போது சைவத்தையும், தமிழையும் வளர்த்து வருபவர்களாகக் காணப்படுபவர்கள் பெரும்பாலும் வயதானவர்களே. இந்த நிலை மாறி இளையோரையும் இந்த சூழலுக்குள் கொண்டுவந்தால் தமிழும் மேன்மை பெறும் சைவமும் தளைத்துச் செழிப்புற வளரும்.

இந்த உண்மையை இளையேராகிய நாமே புரிந்துகொண்டு செயற்படவேண்டும். அதாவது பழமையைப் புரிந்து புதுமையைப் புனைந்து சைவத்தமிழின் ஒளியைமீண்டும் பரப்பும் ஒருதலைமுறையை உருவாக்க இளையோரால் மட்டுமே முடியும் என்ற உண்மையை உணர்ந்து செயற்படவேண்டும்.

**அவிலாஜினி**

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA

5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2025இல் வெளியிடப்பெற்றது